செ.வெ.எண். 32 நாள். 12-04-2017

**பத்திரிக்கைச் செய்தி**

**2017 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி அமைதி விருதிற்க்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.**

மகாத்மா காந்தி அவர்களின் 125வது பிறந்த தினத்தை முன்னிட்டு இந்திய அரசின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதி, மற்றும் சமூக ஒற்றுமைக்காக காந்திய வழிகள் மற்றும் அகிம்சை வழிகளில் கடந்த 10 ஆண்டுகளில் ஆற்றிய சேவைக்களாக அங்கீகரிக்கும் விதமாக இந்த உயரிய விருது வழங்கப்படுகிறது. இவ்விருதானது மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் தலைமையிலான குழுவால் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.1.00 கோடிக்கான ரொக்கப்பரிசு மற்றும் பாராட்டு பத்திர விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது. இவ்உயரிய விருதினை Dr.JuliusNyerere, Former President of Tanzania,Dr. Gerhard Fischer, Federal Republic of Germany, Ramakarishna Mission, Baba Amte( Shri Mulidhar Devidar Amte), Late Dr.Nelson Mandela, Former President of South Africa, Grameen Bank of Bangladesh, Archbishop Desmond Tutu of South Africa, Shri Chandi Prasad Bhatt & Indian Space Research Organisation ஆகியோர்கள் பெற்றுள்ளார்கள். இவ்விருதிற்கான விண்ணப்பங்கள் www.sdat.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், மாவட்ட விளையாட்டு அலுவலகம், அண்ணா விளையாட்டரங்கம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி -2 என்ற முகவரியில் அணுகி விண்ணப்ப படிவத்தினை இலவசமாக பெற்று கொள்ளலாம். மேலும் தகவலுக்காக 0462-2572632 என்ற எண்ணில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம் 2 நகல்களாக 14.04.2017 நண்பகல் 12.00 மணிக்குள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் சமர்ப்பிக்கும்படி கேட்டு கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை முனைவர்.மு.கருணாகரன் இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்கள் தெரிவித்தார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி மாவட்டம்

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி